**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 238/2020 P.W. 1/L.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ரத்தீஸ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. சுகுமாரன் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 10.06.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 2வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து மருத்துவமனையில் பணிச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை நான் எப்போது போட்டுக்கொடுத்தேன் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 30.07.2018ம் தேதி அதிகாலை 00.20 மணி அளவில் மணவாளக்குறிச்சி காவல்நிலைய ஆய்வாளர் (பொ.) இரணியல் காவல் ஆய்வாளர் அவர்கள் போலீஸ் பார்ட்டி சகிதம்

வாகன தணிக்கை செய்துக்கொண்டிருந்த போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை விசாரணை செய்த போது அவர்கள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவுச் செய்தார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அத்தாட்சி தயார் செய்து தடயப்பொருட்களை கைப்பற்றினார்கள் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும் சுபாஷ் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும் கூறிவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.